**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 13/2021

Deposition of witness for Prosecution : Pw6

Defence :

Name : Anthony samy
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 27.10.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் காந்தி நகர் தேன்கனிகோட்டை ரோட்டில் குடியிருக்கிறேன். நான் ஜேஎம்ஜே கம்பெனி உரிமையாளர். எனது கம்பெனி சின்ன எலசகிரி காமராஜ் நகரில் உள்ளது. ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1எனதுகம்பெனியில் சூப்பரைசராக வேலை பார்க்கிறார். 28.12.12 அன்று இரவு 11 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்தார். எதிரி டிஎன்20ஆர்2364 வண்டியில் பொருட்களை எடுத்துவ ந்தார் என்றும் எண்ணி இறக்குவதாக இருந்தால் நான் ˙நாளைக்கு வருவதாக சொல்லிவிட்டு எதிரி கிளம்பிவிட்டதாக என்னிடம் சொன்னார். நான் எஸ்எப்எல்கம்பெனிக்கு போன்˙ செய்து தகவல்சொன்னேன். அவர் எதிரிக்கு போன்செ சய்து பொருட்களை இறக்கும்படி சொல்வதாக சொன்னார். இரவு சுமார் 12மணியளவில் சாட்சி ஆரோக்யராஜ் எனக்கு போன்செய்தார். இரவு 11.30 மணிக்கு எதிரி வண்டியை எடுத்து வந்ததாகவும் பொருட்களை கணக்கிட்டு இறக்கியதாகவும் இற்கதும் போது எதிரி அ.சா.1 ஐ தகாத வார்த்தையால் திட்டியதாகவும் பொருட்களை இறக்கிய பின்பு அ.சா.1 ஐ சத்தம் போடாமல் கிளம்பும் படி எதிரியை சொன்னதாகவும் அதற்கு பின்பு எதிரி வண்டி கேபினை திறந்து அருவாளை எடுத்து வந்து அ.சா.1 ஐ இடது புற கழுத்தில் வெட்டியதாக என்னிடம் தகவல் சொன்னார். நான் வருவதற்குள் அ.சா.1 ஐ இஎஸ்ஐ மருத்துவமனக்க எடுத்து சென்றிருந்தார்கள். நான் அவரை இஎஸ்ஐ

மருத்துவமனையில் போய் பார்த்தேன். அப்பொழுது அ.சா.1ன் கழுத்தில் பஞ்சை வைத்து அழுத்தியிருந்தார்கள். இஎஸ்ஐ மருத்துவர் அ.சா.1 ஐ அரசு மருத்துவமனை ஓசூருக்கு அழைத்து வந்தார். அதன்பின்பு அ.சா.1 மேல் சிகிச்சைக்காக செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனியல் வைத்து அ.சா.1க்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 30.12.2012 அன்று போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

எதிரி எங்கள் கம்பெனிக்கு 2 வருடமாக வண்டி ஓட்டுகிறார். எதிரி இரவு பகல் என்று பொருட்கள் அனுப்பப்படும் நேரங்களில் எங்கள் கம்பெனிக்கு பொருட்களை எடுத்து வருவார். சம்பவத்றிக்கு முன்பு வரை எதிரிக்கும் எங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. கம்பெனிக்கு வரும் பொருட்களை எண்ணி இறக்குவோம். பொருட்கள் இரும்பு பிளாஸ்டிக் பெட்டிகளில் அடைக்கப்படாமல் வரும். எங்கள் கம்பெனியில் இரவு பணியில் சுமார் 24 பேர் வேலை செய்வார்கள்.இரவில் வாட்ச்மேன்இருக்க மாட்டார்.இரவில் எப்பொழுதும் வாடச்மேன் இருக்கமாட்டார்.பிரதான தகவு பூட்டப்பட்டிருக்கும். எங்கள் கம்பெனியில் இரண்டு புறம் 7 அடிஉயர காம்பவுண்டு., பின்புற காம்பவுண்டு 4 அடி உயரத்தில் உள்ளது. அ.சா.1 இரவு 11 மணிக்க எனக்கு போன் செய்தார். அ.சா.1 போன் செய்தவுடன் எனது கம்பெனி ஆட்களை நான் விசாரிக்கவில்லை. எஸ்எப்எல் கம்பெனிக்கு தான்போன் செய்தேன். நான் போன் செய்த போது பொருட்களை அனுப்பிய நிறுவனத்திற்கு எதிரி பொருட்களை இறக்காமல் வந்த விவரம் தெரியாது. எதிரி என்ன நேரத்தில் கம்பெனிக்குவ ந்தார் என்பதும் கம்பெனியில் இருந்து சென்றார் என்பதும் அ.சா.1 சொல்லி தான் தெரியும்.அ.சா.1க்கும் எதிரிக்கும் முன் விரோதம் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் மதியம் தான் நான் கம்பெனிக்கு சென்றேன்.அ.சா.1 ஐ நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான் வரும்போது எதிரியின் வண்டி கம்பெனியில் இருந்தது என்ற சொன்னால் சரியல்ல. நான் வரும்போது இல்லை. உண்மையில் அ.சா.1,3,4,5 ஆகியோர் சேரந்து எதிரியை அடித்துள்ளார்கள் என்றும் அ.சா.1 என்னிடம் பொய் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.